03.10.2024

O.S.No. 284/2015

வா.சா.1.திரு. அழகி,  க.பெ.ஆனந்தராஜ்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு** குறுக்கு விசாரணை

1. 1ம் பிரதிவாதியான எனது தகப்பனார் அழகன் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். எனக்கு தற்போது வயது 36 ஆகிறது. 6ம் வாதி இளையராஜா எனது இளைய சகோதரர் ஆவார். 1 முதல் 3 வாதிகளுக்கு பின்னிட்டு தான் 4 முதல் 6 வாதிகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி செல்வி என்பவர் எனது சித்தப்பாவின் மனைவி என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிரோடு இருக்கும்போதே அவரது மக்களாகிய நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த தாவாவை சர்வே எண்.22/8B2-ல் 27 செண்டில் மேல்புரம் 13-1/2செண்டுக்கு மட்டும் இந்த தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தகப்பனாரும், எனது சித்தப்பா வீரணனும் சேர்ந்து அவர்களுக்கான சொத்தை பொறுத்து கூட்டுப்பட்டா பெற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கூட்டுப்பட்டா பெற்ற பின்பு எனது தந்தையும், எனது சித்தப்பாவும் சேர்ந்து 04.04.2002 செல்லத்துரை என்பவருக்கும், 24.04.2002ல் மலையாளம் என்பவருக்கும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2003ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. அப்போது எனக்கு 20 வயது. எனது தந்தையும், எனது சித்தாப்பவும் சேர்ந்து 24.04.2002ல் 2ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.22/8B2-ல் உள்ள 27 செண்டை கிரையம் கொடுத்த விவரம் தெரியுமான என்றால் எனக்கு தெரியாது. நான் ஆரம்பத்திலிருந்து எனது சித்தி வீட்டில் இருந்ததால் மேற்படி கிரைய விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி, கிரையங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் இந்த வழக்கிற்காக தற்போது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தையும், எனது சித்தாப்பவும், 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தில் எனது சகோதரர்களான 4 முதல் 6 வாதிகளை மைனர்களாக கட்டுப்படுத்தி அவர்களுக்கு கார்டியனாக எனது தந்தை இருந்து பதிவு பத்திரம் மூலம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2. 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் மூலம் பழைய சர்வே எண்.359/8B-யில் 62 செண்டில் மேற்குப் பக்கம் உள்ள புஞ்சை நிலம் 27 செண்டை கிரையம் எழுதிக் கொடுத்துள்ளதாக அந்த கிரைய ஆவணத்தில் காணப்படுகிறது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி, கிரைய ஆவணத்தின்படி, அந்த 27 செண்ட் நிலத்தை 2ம் பிரதிவாதி அடைந்து அனுபவித்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் முன்பு எனது சித்தப்பா வீட்டில் தான் அந்த சொத்தை அனுபவித்து வந்தார்கள். நான் எனது சித்தி வீட்டில் இருந்தேன். 2ம் பிரதிவாதிக்கு கிரையம் பெற்ற சொத்தை 03.03.2003ல் 3ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் பிரதிபிரயோஜனத்தை பெற்றுக் கொண்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த விவரம் நாங்கள் தாவா சொத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்தபோது தான் தெரியும்.

3. தாவா சொத்து அமைந்துள்ள ஊரிலேயே நான் இல்லை என்பதால் நானோ, எனது குடும்பத்தாரோ தாவா சொத்தை ஒருபோதும் அனுபவிக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக தாவா சொத்தை அனுபவத்து வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரிடம் சொத்து கேட்டு நானோ மற்ற வாதிகயோ, எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் அருகே எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நாங்கள் மல்லிகை பூ விவசாயம் செய்ததுபோல், 2ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியிடமிருந்து குத்தகைக்கு பெற்று தாவா சொத்தில் மல்லிகைப் பூ விவசாயம் செய்தார்கள் என்றால் சரியல்ல. தரிசாகத் தான் இருந்தது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வந்தபோது 3 முதல் 6 வாதிகள் தாவா சொத்தில் அவர்கள் தான் விவசாயம் செய்வதுபோல் பாவலா காண்பித்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வந்தபோது நான் ஊரில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தந்தையும், சித்தப்பாவும், 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பின்பு அவர்களது மீதமுள்ள சொத்துக்களை எனது தகப்பனார் பெயருக்கு எனது சித்தப்பா விடுதலை செய்து கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால், 2ம்பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்த பத்திரத்தைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு எழுதப்படிக்க தெரியும்.

4. எல்லா விவரமும் தெரிந்து தான் தாவா சொத்தை எனது தந்தையும், சித்தப்பாவும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றாலும், இந்த வழக்கிற்காக எனது தந்தைக்கு தெரியாது என்று இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியான ராமலிங்கத்திற்கு 3ம் பிரதிவாதி பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து அதனடிப்படையில் அவர் 5ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்ட விவரம் எனக்கு தெரிமா என்றால் வழக்கு தாக்கல் செய்யும் முன்பு தெரியும். அதனால் தான் வழக்கு தாக்கல் செய்தேன். எனது தந்தையும், எனது சித்தாப்பாவும், 24.04.2002ல் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தபோது நான் மேஜர் என்றால் சரிதான். மேற்படி, கிரைய தேதியிலிருநது குறிப்பிட்ட காலவரையறைக்குள் அந்த கிரையம் செல்லாது என கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் காலம் தாழ்த்தி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவாவில் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1 முதல் 6 வாதிகள் மற்றும் 1 பிரதிவாதி அனுபவத்திலோ, பாத்தியதையோ இல்லாதபோது இந்த தாவாவில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.